

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்தி நகர் பகுதியில் உள்ள புதிய ரேஷன் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மண்டலக் குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, பகுதி செயலாளர் என். பரமசிவம், மாமன்ற உறுப்பினர் சிவசங்கரி பரமசிவம், மாநகர துணை செயலாளர் ஒய்.தேவநேசன், வட்ட செயலாளர் அரிகிருஷ்ணன், சி.கிரி, மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜி.மகேஷ், மாநகர பிரதிநிதிபன்னீர், வட்ட அவைத்தலைவர் உதயகுமார், முன்னாள் அவைத் தலைவர் எம்.சுரேஷ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

**யாராலும் வேலை செய்ய முடியாது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 1967-இல் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தபோது அன்றைக்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேட்டி அளித்தபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். "தி.மு.க.-காரன் ஒரு சிங்கில் டீயை குடித்து விட்டு பம்பரமாக வேலை செய்வான். அதற்கு நாமெல்லாம் ஈடாக முடியாது" என்று வெளிப்படையாகவே சென்னவர் அவர். அதே உணர்வோடு இன்றைக்கும் நான் பார்க்கிறேன்.**

**200 தொகுதிகளுக்கு மேல் நாம் வெற்றி பெறுவோம்!**

நீங்கள் ஆற்றக்கூடிய பணிகள், ஏதோ கொளத்தூர் தொகுதியில் மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய செயல் வீரர்கள் ஆற்றும் அந்தப் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது - 200 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்று, நம்முடைய கூட்டணி நிச்சயமாக வெற்றிபெறும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன், ஆனால், நாம் இப்போது ஆற்றியிருக்கும் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது 200 தொகுதிகளையும் தாண்டி வரும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது. அந்த நம்பிக்கையோடு பொங்கல் விழாவை நாம் கொண்டாடுகிறோம்.

பொங்கல் விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து வரவிருக்கும் தேர்தலில் ஒரு மாபெரும் வெற்றி பெறுவதற்கு உறுதியெடுப்போம் சபதம் எடுப்போம், என்று கூறி மீண்டும் வாழ்த்து சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

## ஒன்றிய விசாரணை அமைப்புகளைப் பயன்படுத்தி

# எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதா?

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!



THE HINDU

Enforcement directives

The BJP is weaponising central agencies against political rivals

The Enforcement Directorate (ED)'s searches on January 8, in Kolkata, at locations linked to the Indian Political Action Committee (I-PAC), are a development set to be repeated in the run-up to the West Bengal Assembly election. I-PAC is a political consultancy firm that spearheaded the ruling Trinamool Congress (TMC)'s election campaign in 2021. The ED said the searches were part of an ongoing money laundering investigation, unrelated to the election, and aimed at tracing the proceeds of the

சென்னை, ஜன. 11 –

ஒன்றிய விசாரணை அமைப்புகளை, அரசியல் போட்டியாளர்களுக்கு எதிராக ஆயுதமாக மோடி அரசு பயன்படுத்துவதாகவும், மேற்கு வங்க தேர்தலுக்கு முன் எதிர்க்கட்சிகளை பழி வாங்கும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளதாகவும் 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

"தி இந்து" ஆங்கில நாளேடு எழுதியுள்ள தலையங்கத்தில், மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலையொட்டி, கொல்கத்தாவில் உள்ள அரசியல் ஆலோசனைகள் வழங்கும் நிறுவனத்தில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமலாக்கத் துறை யினரை கண்டித்து கொல்கத்தாவில் போராட்டம் நடத்திய மம்தா பானர்ஜி, அரசியல் பழி வாங்கும் நடவடிக்கைகளுக்காக, ஒன்றிய விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. பயன்படுத்துவ தாகவும், இந்த சோதனை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், வரும் சட்டமன்ற தேர்தலில், திரிணாமுல் காங்கிரஸின் அரசியல் உத்திகள், தரவுகள் மற்றும் டிஜிட்டல் ஆவணங்களைக் கைப்பற்ற அமலாக்கத் துறை முயற்சிப்பதாகவும் அவர் சாடியுள்ளதை 'தி இந்து' ஆங்கில நாளேடு சுட்டிக்காட்டியுள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை குறி வைத்தே, அமலாக்கத்துறை, ஒன்றிய புலனாய்வுத் துறை மற்றும் வருமான வரித்துறை ஆகிய அமைப்புகள் சோதனை நடத்துவதாகவும், ஒன்றிய அமைப்புகளின் இந்த நடவடிக்கைகள், மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டுகளை கவனிக்கத் தக்கதாக மாற்றுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மற்றும் கட்சிகளுக்கு எதிராக அதீத முனைப்புடன் செயல்படும் ஒன்றிய விசாரணை அமைப்புகள், பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு எதிராக ஒருபோதும் செயல்படுவதில்லை என்பது பல உண்மைகளை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை மறைமுக இலக்காகக் கொண்டே, அமலாக்கத்துறை சோதனைகள் நடைபெறுவதாகவும், ஒன்றிய ஆட்சியாளர்கள், மாநில அரசை நடத்தும் கட்சியை நெருக்கடிக்கு தள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதாகவும் சாடியுள்ளது. 2024 பொதுத் தேர்தலின் போது, பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸின் அனைத்து வங்கிக் கணக்குகளையும் வருமான வரித்துறை முடக்கியது என்பதை நினைவுகூர்வது பொருத்தமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் வெற்றி பெறுவதற்காக, அனைத்து விதிகளை யும், நெறிமுறைகளையும் மீற பா.ஜ.க. தயாராக இருப்பதாகவும், ஆனால், இந்த முயற்சியில், அரசு நிறுவனங்களின் நேர்மை மீதான நம்பகத்தன்மையை மக்கள் இழக்க நேரிடும் என்றும் 'தி இந்து' ஆங்கில நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

## ஜனவரி 14–ஆம் தேதி காலை ஆலந்தூரில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 14-1-2026 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள, மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டக் கழக அவைத் _தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :-

1. வருகிற 25.1.2026 அன்று நடைபெறவுள்ள மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் கூட்டத்தில் பங்கேற்க துணை முதல்வர் - இளைய தலைவர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகை குறித்து
2. தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் திருவிழா
3. முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் வருகிற 8.2.2026 அன்று நமது மாவட்டத்தில் நடைபெற உள்ள சென்னை - விழுப்புரம் மண்டல பூத் கமிட்டி (BLA-2, BLC] முகவர் சந்திப்பு மாநாடு குறித்து.
4. கழக வளர்ச்சி

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. – ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் சமத்துவப் பொங்கல் விழா!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

*சென்னை, ஜன. 11 -*

*சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட, கங்கா நகர் சிறுவர் விளையாட்டு பூங்காவில் இன்று (11.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7:30 மணிக்கு, சமத்துவப் பொங்கல் கொண்டாடப் பட உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.*

*இதில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்வி நிலைக் குழு உறுப்பினருமான ரமணி மாதவன் பங்கேற்கிறார்கள்.*

*ஆகவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி. மாதவன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

# சித்தி புத்தி!



## கேட்டியாடி கதைய

"தமிழகம்
என்ன தான்
இந்த தேசத்திற்கு
வரி வருவாயை
வாரி வாரிக் கொடுத்தாலும்

தங்களுக்கு
ஓட்டுப் போட மறுக்கும்
தமிழ்நாட்டின்
மீதும்
தமிழ் மக்களின்
மீதும்

வடக்கிந்திய கம்பெனிக்கு
அளவற்ற
வெறுப்பு..

அதனை
தீர்த்துக்கொள்ள
அ.தி.மு.க.வை
பிணைக் கைதியாக
பிடித்துக்கொண்டு

வெறி பிடித்து அலையும்
அவர்களுக்கு
வாய்ப்புக்
கொடுத்தால்

புத்திசாலிப் பிள்ளை
சித்தி கொடுமையில்
சிக்கி சீரழிந்த கதையாகி விடும்"..

ஆம்...

பின்னிப் பெடலெடுத்து
நம்மை
பீகாருக்கும்
கீழே தள்ளி விடுவார்கள்..

அதனால..

அழுத்திச்
சொல்வோம்

"வேண்டும்
ஸ்டாலின்

மீண்டும்
ஸ்டாலின்"

**என்னநாஞ்
சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

## ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழக

# முன்னாள் துணைச் செயலாளர் - கழக மூத்த முன்னோடி செ.கண்ணப்பன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன.11-**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான செ.கண்ணப்பன் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:**

ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளராகவும் மாவட்டக் கழகப் பொருளாளராகவும், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவராகவும், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்த கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் செ.கண்ணப்பன் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

இளம் பிராயம் தொட்டு தான் ஏற்றுக் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் வழுவிடாது தீவிர கழகப் பணியாற்றியவர் அவர். கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறையேகியவர் ; கழகத்தின் அடுத்த தலைமுறை இளைஞர்கள் தீவிரமாகப் பணியாற்றுவதற்கு தூண்டுகோலாக இருந்து அவர்களை வழிநடத்தியவர் !

அவரது மறைவு கழகத்திற்கு இழப்பு எனில் அது மிகையல்ல !

அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**பாஜகவின் விபரீதக் கூட்டணி!**

